1978 மார்ச் 4] [மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் எடுத்துச் சொன்னதைப்போல், நேரம் ஆகிக் கொண்டே போகிறது. கேள்வி நேரம் ஒரு மணி நேரம் என்ற நிலை மாறி, அதற்கு மேலாகவே ஆகிற காரணத்தினால், அடுத்தக் கேள்வி என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் சொன்னதை அனைத்து உறுப்பினர்களும் வரவேற்பார்கள் என்றே நான் கருதுகிறேன்.

திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் பேசும்போது* * * * * என்று சொன்ன வார்த்தைகளை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் அவர்கள் சொன்னதை நானே சொல்ல வேண்டுமென்று இருந்தேன். கேள்வி நேரம் முடிந்த பிறகு சொல்கிறேன். முன்வரிசையிலே உட்கார்ந்து கொண்டிருக்கின்ற எதிர்க் கட்சித் தலைவர்கள் பேரவைத் தலைவரோடு பொறுப்புடன் ஒத்துழைக்க வேண்டும். ஆனால் லத்தீப் அவர்கள் கருதுவதுபோல், அவர்கள் எழுந்திருக்கும் போதெல்லாம் எல்லாக் கேள்விகளுக்கும் அவர் அழைக்கப்பட வேண்டுமென்பது கட்டாயமில்லை.

அது மாத்திரமல்ல. ஒன்று கூற விரும்புகிறேன். கட்சிகளிலே இருக்கின்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலே, இனிமேல் நேரத்தை கணக்கில் எடுத்துக்கொண்டு, இதற்குத் தகுந்தபடி கூப்பிடுகிறேன். ஆகவே, தயவுசெய்து இதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவு நூற்பு ஆலை, அரியூர்.

* 400 வினா—திரு. அ. கூ. அரங்கநாதன்: மாண்புமிகு கைத்தறி-பஞ்சாலைகள் துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வேலூர் அருகிலுள்ள அரியூர் கூட்டுறவு நூற்பு ஆலையை மேலும் விரிவு படுத்துவதற்கான திட்டமேதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: வேலூர் அருகில் அரியூரிலுள்ள வட ஆற்காடு மாவட்ட கூட்டுறவு நூற்பாலை 13,824 கதிர்களிலிருந்து 25,056 கதிர்களுள்ள ஆலையாக அண்மையில் விரிவு படுத்தப்பட்டுள்ளது. மேலும் விரிவுபடுத்துவதற்கான திட்டம் ஏதும் தற்சமயம் இல்லை.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

திரு. துரை முருகன்: தலைவர் அவர்களே, மிகத் தரமான நூல் உற்பத்தி ஆகின்ற காரணத்தினால், 13,000 கதிரில் இருந்ததை, 25,000 கதிராக அதிகமாக்கி இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். லாபத்திலே போய்க் கொண்டிருக்கிற மில்லை மேலும் விரிவுபடுத்துவதற்கு இல்லை என்றும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். லாபத்திலே நடப்பதை ஏன் விரிவுபடுத்தக் கூடாது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே, தமிழகத்திலே, தமிழக அரசின் பொறுப்பிலே இருக்கின்ற மற்றக் கூட்டுறவு நூற்பாலைகளையும் இந்த அளவுக்கு முதலிலே விரிவுபடுத்த வேண்டும். இரண்டாவது, ஒரு ஆலையை விரிவு படுத்துவதற்கு முன் இன்றைக்கு இருக்கக்கூடிய லாப நஷ்டத்தை மட்டும் வைத்துக்கொண்டு பார்ப்பதற்கில்லை. இந்த ஆலையிலே, உற்பத்தி செய்யப்படுகின்ற பல்வேறு வகையான நூல்கள், (different counts) டிபரெண்ட் கவுன்ட்ஸ் பொதுச் சந்தையிலே எப்படி விற்பனையாகிறது என்பதைப் பொறுத்தும், மூலப்பொருள் கிடைப்பதைப் பொறுத்தும், மேலும் விரிவுபடுத்துவதற்கு அவசியமானால் அரசு நிச்சயம் பரிசீலனை செய்யும்.

திரு. ரா. மார்க்கபந்து: தலைவர் அவர்களே, இந்த வேலூர் அருகிலுள்ள அரியூர் கூட்டுறவு நூற்பாலையை விஸ்தரிப்பதற்கு பள்ளிகொண்டாவிலே ஏறக்குறைய 4 ஏக்கர் நிலத்திலே, இது தொடர்பான ஒரு பகுதியை அமைப்பதற்கு ஆய்வு நடத்தப் பட்டிருக்கிறது. அதைக் கைவிட்டு விட்டார்களா? அல்லது மேற் கொண்டு ஆய்வு நடத்தி, ஆரம்பிப்பதற்கான ஏதாவது உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே, ஏற்கனவே 13,000 கதிர்களாக இருந்ததை 25,000 கதிர்களாக ஆக்கவேண்டுமென்ற திட்டத்திற்கு வந்தபிறகு, குறிப்பிட்ட இடங்களை ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு, 25,056 கதிர்களாக மாற்றப்பட்டு, 1977 மார்ச்சுத் திங்களில் விரிவு படுத்தும் திட்டம் நிறைவேற்றப்பட்டு, இப்போதுதான் அங்கே உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. எனவே, மேலும் தேவைப்பட்டால் எதிர்காலத்தில் இதுகுறித்துப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10—20)

திரு. மி. வின்சென்ட்: இந்த மாதிரி வேறு எத்தனை ஆலைகளை விரிவுபடுத்தும் திட்டம் அரசிடம் உள்ளது? வேலை வாய்ப்பில் அகதிகளுக்கு மட்டும் முன்னுரிமை கொடுப்பது உண்மையா?

1978 மார்ச் 4]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு உறுப்பினர் துரை முருகன் அவர்கள் கேட்டபோதே பதில் சொல்லியிருக்கிறேன். தமிழகத்திலுள்ள கூட்டுறவு நூற்பாலைகளில் மேலும் ஆறு நூற்பாலைகளை விரிவுபடுத்தக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. விரிவுபடுத்தும் திட்டம் நிறைவேற்றப்படும்போது மத்திய அரசு விரிவு படுத்தும் திட்டத்திற்குப் பணஉதவி செய்கிற காரணத்தால் அகதிகளுக்கு முதலுரிமை கொடுத்துவிட்டு மற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி(*) இடம் பெற்றிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அவைக்கு வேண்டுகோளாக விடுகிறேன். கேள்விகளுக்காக எனக்குக் கொடுக்கப்பட்ட நேரம் ஒரு மணி நேரம். அதிலே எல்லோருடைய எண்ணத்தையும் கவரத்தக்க அளவுக்கு கருத்துக்களைத் தெரிவிக்க வாய்ப்புத் தரவேண்டும். எல்லாவற்றுக்குமே கையைத் தூக்கி கொண்டிருப்பதால் தவிர்க்க வேண்டிய நேரத்தில் தவிர்த்துத் தான் தீரவேண்டும். எல்லாவற்றுக்கும் அனுமதி கொடுக்க வேண்டுமென்று கோருவதில் பயனில்லை. முதல் வரிசையில் இருப்பவர்கள் மற்ற உறுப்பினர்களுக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டும். முதல் வரிசையில் இருப்பவர்கள் அதற்காக வருத்தப்படுவதில் நியாயம் இல்லை. இன்றைக்கு நடந்த வாதங்கள்—என்னைப் போன்றவர்களுக்கு, உறுப்பினர்களைப் போன்று அனுபவப்பட்டவர்கள் பேசுகிற வார்த்தைகளாக அமையவில்லை. ஆகவே, ஒலி பெருக்கி மூலமாக, ஒலி பெருக்கி இல்லாமல் உறுப்பினர் திரு. லத்தீப் பேசிய அத்தனையையும் நீக்க வேண்டுமென்று உத்தரவிடுகிறேன்.

திரு. டி. கே. கபாலி : தலைவர் அவர்களே * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த மாதிரிப் பிரச்சினைகளை எழுப்ப வேண்டுமென்றால் எழுதிக் கொடுக்க வேண்டும். தயவு செய்து அமருங்கள்.

திரு. டி. கே. கபாலி : * * * *

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தலைவர்கள் அதைப்பற்றி பேசுவார்கள். தாங்கள் தயவு செய்து உட்காருங்கள். அதைப் பற்றிய பிரச்சினை சுமுகமாக முடிய அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது. மேலும் இதுபற்றிப் பேசவேண்டாம்.

2. தகவல் கோரல்.—

உறுப்பினர்கள் பழைய விடுதியில் நடந்த திருட்டு குறித்து.

*திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, நேற்றையதினம் சட்டமன்ற உறுப்பினர்களுடைய பழைய விடுதியில் நம்முடைய ஆளும் கட்சியைச் சார்ந்த உறுப்பினருடைய அறையில் அறை எண். 84-ல் பகல் ஒரு மணி அளவில் இரண்டு பேர் புகுந்து சில சாமான்களை எடுத்துக் கொண்டு ஓடிவிட்டார்கள். நான் பக்கத்து அறையில் 83-வது அறையில் இருக்கிறேன். காவலர்கள் விரட்டிக்கொண்டு போய் ரோட்டில் பிடித்தபோது அவர்கள் கத்தியைக் காட்டி மிரட்டிவிட்டு ஓடிவிட்டார்கள். ஆகவே, அங்கே போதிய பாதுகாப்புக்கான ஏற்பாட்டைச் செய்யவேண்டுமென்று பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் கூறுகிற புகார் இன்னும் என்னுடைய கவனத்திற்கு வரவில்லை.

திரு. எச். ஜி. ஆறுமுகம் : இன்று காலை என்னுடைய அறையைத் திறந்து வைத்திருந்தபோது இரண்டு ஷர்ட், வேஷ்டி, 32 ரூபாய் திருடு போய்விட்டது. அதையும் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைத் தலைவர் பொறுப்பில் இருக்கும் விடுதியில் நடந்த நிகழ்ச்சி பற்றி எனக்கே இன்னும் தகவல் வரவில்லை. உடனடியாக இலாகாவினருடன் கலந்து நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளிக்கிறேன்.

திரு. டி.கே. கபாலி : * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கபாலி இது பற்றிப் பேசியது அனைத்தையும் நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.